ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா2ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா3ந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸதா3 ஹ்ரு'தி3 ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ தீர்ப்பாரை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தீர்ப்பாரை ॥

## வெறிவிலக்கு

‡தீர்ப்பாரையாம் இனி⋆ எங்ஙனம் நாடுதும் அன்னைமீர்⋆
ஓர்ப்பால் இவ்வொண்ணுதல்⋆ உற்ற நல் நோய் இது தேறினோம்⋆
போர்ப்பாகு தான் செய்து⋆ அன்றைவரை வெல்வித்த⋆ மாயப்போர்த்
தேர்ப்பாகனார்க்கு⋆ இவள் சிந்தை துழாய்த் திசைக்கின்றதே (1)

திசைக்கின்றதே இவள் நோய்⋆ இது மிக்க பெருந் தெய்வம்⋆
இசைப்பின்றி நீர் அணங்காடும்⋆ இளந் தெய்வம் அன்றிது⋆
திசைப்பின்றியே⋆ சங்கு சக்கரம் என்றிவள் கேட்க⋆ நீர்
இசைக்கிற்றிராகில்⋆ நன்றே இல் பெறும் இது காண்மினே (2)

இது காண்மின் அன்னைமீர்!⋆ இக்கட்டுவிச்சி சொற்கொண்டு⋆ நீர்
எதுவானும் செய்து⋆ அங்கோர் கள்ளும் இறைச்சியும் தூவேன்மின்⋆
மதுவார் துழாய் முடி⋆ மாயப் பிரான் கழல் வாழ்த்தினால்⋆
அதுவே இவள் உற்ற நோய்க்கும்⋆ அரு மருந்தாகுமே (3)

மருந்தாகும் என்று⋆ அங்கோர் மாய வலவை சொற்கொண்டு⋆ நீர்
கருஞ்சோறும் மற்றைச் செஞ்சோறும்⋆ களன் இழைத்தென் பயன்⋆
ஒருங்காகவே உலகேழும்⋆ விழுங்கி உமிழ்ந்திட்ட⋆
பெருந்தேவன் பேர் சொல்லகிற்கில்⋆ இவளைப் பெறுதிரே (4)

இவளைப் பெறும் பரிசு⋆ இவ்வணங்காடுதல் அன்றந்தோ⋆
குவளைத் தடங்கண்ணும்⋆ கோவைச் செவ்வாயும் பயந்தனள்⋆
கவளக் கடாக் களிறட்ட பிரான்⋆ திருநாமத்தால்⋆
தவளப் பொடிக் கொண்டு⋆ நீர் இட்டிடுமின் தணியுமே (5)

தணியும் பொழுதில்லை⋆ நீர் அணங்காடுதிர் அன்னைமீர்⋆
பிணியும் ஒழிகின்றதில்லை⋆ பெருகும் இதுவல்லால்⋆
மணியின் அணி நிற மாயன்⋆ தமர் அடி நீறு கொண்டு⋆
அணிய முயலின்⋆ மற்றில்லை கண்டீர் இவ்வணங்குக்கே (6)

www.prapatti.com

அணங்குக்கரு மருந்தென்று⋆ அங்கோர் ஆடும் கள்ளும் பராய்⋆
சுணங்கை எறிந்து⋆ நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர்⋆
உணங்கல் கெடக்⋆ கழுதை உதடாட்டம் கண்டென் பயன்⋆
வணங்கீர்கள் மாயப் பிரான் தமர்⋆ வேதம் வல்லாரையே (7)

வேதம் வல்லார்களைக் கொண்டு⋆ விண்ணோர் பெருமான் திருப்
பாதம் பணிந்து⋆ இவள் நோய் இது⋆ தீர்த்துக் கொள்ளாது போய்⋆
ஏதம் பறைந்தல்ல செய்து⋆ கள்ளூடு கலாய்த் தூய்⋆
கீத முழவிட்டு⋆ நீர் அணங்காடுதல் கீழ்மையே (8)

கீழ்மையினால் அங்கோர்⋆ கீழ்மகன் இட்ட முழவின் கீழ்⋆
நாழ்மை பல சொல்லி⋆ நீர் அணங்காடும் பொய் காண்கிலேன்⋆
ஏழ்மைப் பிறப்புக்கும் சேமம்⋆ இந்நோய்க்கும் ஈதே மருந்து⋆
ஊழ்மையில் கண்ண பிரான்⋆ கழல் வாழ்த்துமின் உன்னித்தே (9)

உன்னித்து மற்றொரு தெய்வம் தொழாள்⋆ அவனையல்லால்⋆
நும்மிச்சை சொல்லி⋆ நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர்⋆
மன்னப் படும் மறைவாணனை⋆ வண் துவராபதி
மன்னனை⋆ ஏத்துமின்⋆ ஏத்துதலும் தொழுதாடுமே (10)

‡தொழுதாடி தூ மணி வண்ணனுக்கு⋆ ஆட்செய்து நோய் தீர்ந்த⋆
வழுவாத தொல் புகழ்⋆ வண் குருகூர்ச் சடகோபன்⋆ சொல்
வழுவாத ஆயிரத்துள்⋆ இவை பத்து வெறிகளும்⋆
தொழுதாடிப் பாட வல்லார்⋆ துக்க சீலம் இலர்களே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com